1982 ஏப்ரல் 2] [திரு. இரா. தாமரைக்கனி]

இருந்த எக்ஸைஸ் ட்யூட்டியையே தற்போதும் நிர்ணயம் செய்ய நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் அவர்களே, இதுமாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடமும் சிறு தொழில் துறை அமைச்சரிடமும் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எஃபெக்ட் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் மீண்டும் ஒருமுறை இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கிராமத் தொழில் துறை அமைச்சரின் மூலமாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எஃபெக்ட் எல்லாம் நிறைய இருக்கின்றது.

5. அறிக்கை அளித்தல்.

சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார்பிலே பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த அறிக்கை அளிக்கப்படுகின்றது. அறிக்கையின் இரு நகல்கள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேலவை விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டி இருப்பதன் காரணத்தால் அத்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவுகளைத் தள்ளி வைத்து மற்றைய அதற்கடுத்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளை வரிசையாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக இத்தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

பேரவையின் விதி 30 உள்விதி 3-ன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் திருதம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்ட முன் வடிவைத் தள்ளி வைத்து மற்ற சட்ட முன்வடிவு களைத் தொடர்ந்து வரிசை முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது யாவருக்கும் தெரியும். அவ்வாறே 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்திலும் காணப் படுகின்றது.

ஆனால் சிற்சில சமயங்களில் அலுவலகக் கடிதங்களிலும் குறிப்புகளிலும், பத்திரிகைகளிலும் இந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றிக் குறிக்கும்போது சுருக்கமாக PAUT என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்றது. பல்கலைக் கழகம் அதனுடைய முழுப் பெயரால் சில தருணங்களில் அழைக்கப் படுவதில்லை. மேலும் சில அரசு நிறுவனங்களுக்கு எடுத்துக் காட்டாக, Anna insti u e of Managemen , Anna Transport Corpora ion என்றும் சில இடங்களுக்கு அண்ணா நகர், அண்ணா சதுக்கம் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. எனவே பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவை போன்று எளிய சுருக்கமான பெயர் அமையும் பொருட்டும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் புகழை உலக அளவிலும் தேசிய அளவிலும் நன்றாகப் பரப்புவதற் காகவும்'' பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்'' என்னும் பெயரை ''அண்ணா பல்கலைக் கழகம் என்று மாற்றவும், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலை கழகச் சட்டத்தை, அண்ணா பல்கலைக் கழக சட்டம் என்று மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. அம்முடிவிற்கு ஏற்ப 1978 ஆம் ஆண்டு மூலச் சட்டத்தை உரிய முறையில்

---

* 1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.